DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.26/2024

**prosecution witness: LW14 as PW-9**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : சரிதாபாலு | | தொழில் | : |
| த/பெ. | : | | வயது | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | | |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

15.07.2025

(எதிரி மனுவின் பெயரில் ஆஜர் இல்லை, எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

முதல் விசாரணை :-

நான் தற்சமயம் மண்டபம் காவல் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு.சதீஷ்குமார் மற்றும் முதற்கட்ட விசாரணை செய்த காவல் ஆய்வாளர் திரு.மலைச்சாமி(பொறுப்பு) மண்டபம் ஆகியோர்கள் பணிமாறுதலாகி சென்றுவிட்டபடியாலும், அவர்கள் என்னுடன் பணிபுரிந்ததால் அவர்கள் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதால் அவர்களுக்காகவும் நான் சாட்சியமளிக்கிறேன்.

கடந்த 22.07.2023 ம் தேதி 19.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் சதீஷ்குமார் மண்டபம் காவல்நிலையப் பொறுப்பில் இருந்த போது தங்கச்சிமடத்தை சேர்ந்த ராஜேந்திரன் மகன் மாரிமுத்து என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப மண்டபம் காவல் நிலைய குற்ற எண். 130/2023 ஆக பிரிவுகள் 279, 304(A) இதச வாக வழக்கு பதிவு செய்துள்ளார்.

புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து கனம் இராமேஸ்வரம் நீதித்துறை நடுவருக்கு சமர்ப்பித்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆகும். பின்பு ஒரு நகலை காவல் ஆய்வாளர் திரு.மலைச்சாமி அவர்கள் வசம் ஒப்படைத்துள்ளார்.

பின்பு காவல் ஆய்வாளர் திரு.மலைச்சாமி அவர்கள் அன்றைய தினமே 20.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் லெட்சுமணன், சங்கிலி முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன் **பார்வை மகஜர் அ.சா.ஆ.4** ஆகும். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** ஆகும்.

பின்பு சாட்சிகள் மாரிமுத்து, பாலமுருகன், அன்னலெட்சுமி, பசுபதி, நம்புராஜன், ராஜா, லெட்சுமணன், சங்கிலி முருகன் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளார்.

பின்பு 23.07.2023ம் தேதி வழக்கில் இறந்த பாண்டியராஜன் என்பவரின் இறப்பின் மீதான பிரேத விசாரணையை இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கு முன்பு வைத்து காலை 09.00 மணி முதல் 10.00 மணி வரை சாட்சிகளை விசாரணை செய்து பின்பு வேண்டுகோள் கடிதம் மூலம் மண்டபம் மு.நிகா.1785 திரு.மணிகண்டன் என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளார்.அன்றைய தினமே சாட்சிகள் மணிகண்டன், சார்பு ஆய்வாளர் சதீஷ்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும்.**

பின்பு 23.07.2023ம் தேதி இவ்வழக்கினை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு நிலையத்தில் ஆஜரான இவ்வழக்கின் எதிரியான ராஜேஷ், த/பெ.நல்லுச்சாமி, நாமக்கல் என்பவரை காலை 11.00 மணிக்கு நிலையத்தில் வைத்து கைது செய்து நிலையப்பிணையில் விடுவித்தேன்.

பின்பு அன்றைய தினமே எதிரி ஓட்டி வந்த TN 68 5757 என்ற எண்கொண்ட Ashok Leylond பஸ்ஸையும், 11.08.2023ம் தேதி இவ்வழக்கில் இறந்து போனவர் ஓட்டிவந்த TN 65 AJ 1033 TVS Star City என்ற இருசக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்களிடம் ஆய்வுக்கு உட்படுத்தினேன். பின்பு 18.09.2023ம் தேதி இராமநாதபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகம் சென்று இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட இரண்டு வாகனங்களுக்குரிய ஆய்வறிக்கைகள் பெற்று பார்வையிட்டு மோட்டார்வாகன ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த TN 65 AJ 1033 TVS Star City என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆகும். TN 68 5757 என்ற எண்கொண்ட Ashok Leylond பஸ்ஸின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 ஆகும்.**

அதை தொடர்ந்து இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கில் இறந்த நபருக்கு பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.மணிகண்டன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். அந்த **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.9 ஆகும்.**

இவ்வழக்கில் எனது விசாரணையை முடித்து எதிரியின் மீது 18.09.2023ம் தேதி சட்டப்பிரிவுகள். 279, 304(A) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:—</u>

எதிரியிடம் வாகன ஓட்டுநர் உரிமம் முறையாக இருந்தது என்றால் சரிதான். இறந்து போன நபர் தலைக்கவசம் எதுவும் அணிந்துவரவில்லை என்றால் காவல் ஆய்வாளர் மலைச்சாமி விசாரணையில் அதுபற்றி குறிப்பிடவில்லை. விபத்துக்குள்ளான வாகனங்களை நான் பார்வையிட்டேன். எங்கு வைத்து பார்வையிட்டேன் என்றால் காவல்நிலையத்தில் வைத்து பார்வையிட்டேன். விபத்துக்குள்ளான பேருந்தில் எந்த பக்கம் சேதம் ஏற்பட்டிருந்தது என்றால் முன் வலது பக்கம் சேதம் ஏற்பட்டிருந்தது. பேருந்தில் பயணித்த யாருக்கும் எந்த காயமும்

ஏற்படவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் கவனக்குறைவாக ஓட்டிவந்தால் தான் முன்பக்கத்தில் சேதம் ஏற்படும் என்றால் சரியல்ல.

பாம்பன் ரோடு பாலத்தில் முடிவில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். வேகத்தடையை தாண்டி பேருந்தை வேகமாக இயக்க முடியாது என்றால் சரியல்ல வேகத்தடைக்கும், சம்பவ இடத்திற்கு இடையே இடைவெளி இருக்கிறது.

சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமல், முறையாக புலன்விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இருசக்கர வாகனம் ஓட்டி வந்தவர் தலைக்கவசம் அணியாமல் மதுபோதையில் கவனக்குறைவாக பேருந்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும், குற்றத்திற்கு எந்த சம்பந்தமுமில்லை என்றால் சரியல்ல.

ஓம்/–S.B. Sujith, B.A.,B.L.,(Hons)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.